[1978 செப்டம்பர் 7

"நீர் அளவு கருவி"கள் திருடு.

* வினா 76—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோவை மாவட்டம், குரிச்சி என்ற ஊரில் மத்திய அரசின் நில நீர் ஆய்வு வாரியத்திற்குச் சொந்தமான 4 "Water level Recorders" திருடு போய்விட்டதாகச் சொல்லப் படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதைக் கண்டுபிடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நான்கு "வாட்டர் லெவல் ரிக்காடர்கள்" 23-9-77 முதல் காணாமற் போனது உண்மை.

(ஆ) இவைகள் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன.

தோட்டக்கலைத் துறை.

* வினா 77— திரு. துரை முருகன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயத் துறையில் இருந்து தோட்டக்கலையை (Horticulture) தனியாகப் பிரித்து ஒரு இலாக்காவாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) கர்நாடக மாநிலத்தில் உள்ளதுபோல் இம்மாநிலத்திலும் தோட்டக்கலை வளர்ச்சிக்கென தனியாக ஒரு துறையை ஏற்படுத்தலாம் என்ற கருத்து ஆராயப்பட்டது.

2. இதனை வேளாண்மை இயக்குநருடன் அரசு கலந்து ஆலோசித்தது. 1979-80 ல் நிறைவேற்ற விரிவான திட்டத்தைச் சமர்ப்பிக்குமாறு வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். திட்டம் அரசுக்குக் கிடைத்தவுடன் தோட்டக் கலைக்கென தனியாக ஒரு துறை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 9.40]

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் துறையிலிருந்து தோட்டக் கலையைத் தனியாகப் பிரித்து செயல்படுத்தப் போவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். கர்நாடகத்தைச் சேர்ந்த பெங்களூருக்கு அருகில் தர்மபுரி

1978 செப்டம்பர் 7]

மாவட்டம் இருப்பதால், தோட்டக்கலை நன்ருக வளர்ச்சி அடையக் கூடிய சீதோஷ்ண, தட்பவெப்ப நிலை, அம்மாவட்டத்தில் இருப்பதால், தோட்டக் கலையை தர்மபுரியில் வளர்க்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய மேலான யோசனையின் பேரில்தான் தோட்டக்கலையின் பயிர்களை எந்தெந்த மாவட்டத்திலே சிறப்பாகக் கொண்டு வரமுடியும் என்கின்ற திட்டத்தினை ஆராய்ந்து வருகிருேம். மேலும் தர்மபுரி மாவட்டத்திலே, தோட்டக் கலைபயிர்கள், பழவகைகள், மலர் வகைகள் போன்றவைகளை வளர்ப்பதற்கான திட்டமும் ஆராயப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச்சூழல் அசுத்தமாவதைத் தடுப்பது பற்றிய குழு.

* வினு 78.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுற்றுப்புறச்சூழல் அசுத்தமாவதைத் தடுக்க உயர்மட்ட போர்டு அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் பணிகள் யாவை ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; (அ) ஆம்.

(ஆ) இக்கழகம் ஓர் ஆலோசனைக் கூடமாக செயல்பட்டு சுற்றுப்புற சூழ்நிலை பற்றி கொள்கைகளை உருவாக்க அரசுக்கு உதவி செய்து, எல்லாத் துறைகளுக்கும் ஓர் இணைப்பு அமைப்பாக இருந்து சுற்றுப்புறம் மாசுபடுவதை எல்லா விதத்திலும் கவனிக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அக்குழு அரசுக்கு ஏதேனும் பரிந்துரைகள் வழங்கியுள்ளதா ? அப்படி வழங்கியிருந்தால் அந்தப் பரிந்துரைகளைப் பற்றி அறிவிக்க இயலுமா :

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அக்குழு அரசுக்குப் பரிந்துரை செய்தது, ஒரு நீண்ட பட்டியலாக இருப்பதனுல், உறுப்பினர் விரும்புவாராணுல், தனியாக அதைத் தயாரித்து அனுப்புவதற்கு வழி செய்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, இதைப் போலவே தண்ணீரைச் சுத்தப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் சார்பில் சட்டங்கள் ஏதாவது அமைக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னுல் அதனுடைய வரையறைகள் என்ன என்பதைச் சொல்ல இயலுமா ?